[Sri S. Lazar] [18th February 1961

அது போன்ற நிலைமை இதற்கும் ஏற்படக்கூடாது. வீட்டு வசதி கழகத்தைப் பொறுத்த வரையிலும் அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அதைக் கண்ட்ரோல் செய்வதற்குள்ள அதிகாரம் இந்த சட்டசபைக்கு இருக்க வேண்டும். ஆகவே இந்தக் கருத்துக்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். அதே போன்று சூபர்விஷன் சார்ஜஸ் என்று 12½ சத விகிதம் என்று போட்டிருக்கிறார்கள். சாதாரணமாக விவசாயத் துறையில் இது போன்று இருக்கிறது. அங்கே சாதாரணமாக பண்ட் கட்டுவது, மண் அரிப்பை தடுப்பது போன்றவைகளுக்கு இப்படிப்பட்ட ஒரு சார்ஜ் வழங்குகிறார்கள். விவசாயத் துறையில் அப்படிப்பட்ட வேலைகளை அமுல் நடத்தும்போது அது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து இப்படிப்பட்ட ஒரு பணத்தை வசூல் செய்கிறார்கள். அப்படிக் கட்டுவதைப் பார்த்தால் சாதாரணமாக 200 ரூபாய்க்கு வேலை செய்திருந்தால் அதற்கு சூபர்விஷன் சார்ஜ் என்று சுமார் 100 ரூபாய் வரையில் வசூல் செய்கிறார்கள். சாதாரணமாக மணப்பாறைப் பகுதியை எடுத்துக்கொண்டால் இது கண் கூடாகத் தெரியவரும். அப்பேர்ப்பட்ட நிலைமை இங்கும் ஏற்படக்கூடாது. அது இல்லாமல் இருந்தால் உள்ளபடியே இந்த மசோதா ரொம்பவும் வரவேற்கக்கூடியதாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு கூட எவ்வளவோ பெரிய அதிகாரத்தை இந்த கழகத்திற்கு நாம் விட்டுக்கொடுக்கப்போகிறோம். அந்த நிர்வாகத்திற்கு எவ்வளவோ பொறுப்பை நாம் கொடுக்கப்போகிறோம். அந்த அளவில் அவர்கள் அதை சரிவர அமுல் நடத்துகிறார்களா என்று பார்க்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எந்த அளவுக்கு அவர்களுக்கு பொறுப்பு கொடுக்கப்படுகிறதோ அந்த அளவிற்கு அவர்களை கண்காணிக்கக்கூடிய அதிகாரம் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. சாதாரணமாக பஞ்சாயத்து நிர்வாகத்திற்கு என்று எவ்வளவோ பணத்தை நாம் கொடுக்கிறோம். அதைக் கண்காணித்து நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. அதைவிட ஒரு பெரிய பொறுப்பையும், அதிகப்படியான பணத்தையும் இந்தக் கழகத்திற்குக் கொடுக்கும் போது அதைக் கண்காணிக்கக் கூடிய அதிகாரம் இந்தச் சட்டசபைக்கும் சர்க்காருக்கும் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. இந்த கழகத்தின் சேர்மெனுக்கு எவ்வளவோ அதிகாரத்தை நாம் கொடுக்கிறோம். அந்த அளவில் அவர்களைக் கண்காணிக்கக்கூடிய அதிகாரம் இருக்க வேண்டும். இதைக்கூட கனம் அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய வழிவகையும் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, கடைசியாக சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக இப்பொழுது நாம் புதியதாக வீடுகளைக் கட்டும் திட்டத்தை நாம் கொண்டு வருகிறோம். அதைக்கொண்டு வரும் போது அதை அமுல் நடத்தும்போது அதற்கு எந்த விதமான

18th February 1961] [Sri S. Lazar]

சங்கடமும் ஏற்படக்கூடாது. அப்பொழுதுதான் அதை எல்லோரும் வரவேற்பார்கள். பழைய வீடுகள் அல்லது நேரான தெருவுகள் இல்லை அவைகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று சொல்லும்போது அதை நிதானமாகச் செய்யச் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லும்போது அங்குள்ளவர்களுடைய உணர்ச்சியை கிளப்பக்கூடாது. நல்ல முறையில் அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முற்பட வேண்டும். அதற்கு வேண்டிய கவனம் செலுத்த வேண்டும். ஏதோ ரோடுகள் நேராக இல்லை அதனால் வெளியேற வேண்டும் என்று அனாவசியமாக துன்புறுத்தக்கூடாது. அவசியம் ஏற்படக்கூடிய நேரத்தில்தான் வெளியேற்ற வேண்டுமே யொழிய அனாவசியமாக வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடாது. இதில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வெளியேற்றும் நடவடிக்கையில் உணர்ச்சி வேகம் ஏற்படக்கூடிய அளவில் நடவடிக்கை எடுக்கக் கூடாது. இது போன்ற நிலைமை சீனா தேசத்தில் இருந்தது என்று சமீபத்தில் ஒரு புஸ்தகத்தை நான் படிக்கும்போது தெரிந்து கொண்டேன். இதைப் பற்றி பேர்ள் பக் என்பவர் தன்னுடைய புஸ்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அங்கு வீடுகளைக் கட்ட வேண்டும் என்ற நோக்கத்துடன் அதன் தலைவர் அங்குள்ள தெருவு நேராக இல்லை என்று கண்ட மார்ஷல் ஷியாங்கை ஷேக் அவர்கள் அந்தத் தெருவை நேராகக் கட்ட வேண்டும் என்று சொல்லி ஒரு வீட்டின் சொந்தக்காரராகிய ஒரு கிழவியை தன்னுடைய வீட்டை காலி செய்யச் சொல்லி உத்தரவு போட்டதாகவும், அதற்கு அந்தக் கிழவி இணங்காமல் வீட்டை விட்டு காலி செய்ய காலம் கடத்தியதாகவும் அதன் பிறகு அந்தக் கிழவியை அப்புறப்படுத்தி அந்த வீட்டை இடிக்கச் சொன்னதாகவும், அதைக்கண்டு ஜனங்கள் உணர்ச்சி வசப்பட்டு கிளர்ச்சி செய்தார்கள் என்றும பேர்ள் பக் என்பவர் தன்னுடைய புஸ்தகத்தில் எழுதியிருக்கிறார். அந்த நிலைமை இங்கும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். சிலர் தன்னுடைய பரம்பரை வீட்டை விட்டுப் போவதற்கு மனம் இல்லாமல் இருக்கலாம். அந்த முறையில்தான் பேர்ள் பக் என்பவர் எழுதியிருக்கிறார். இதை அவர் மனவருத்தத்துடன் எழுதியிருக்கிறார். அந்த நிலைமை இங்கும் ஏற்படக்கூடாது. உணர்ச்சி வேகத்தைக் கிளப்பக்கூடாது. அப்படி அவர்களை பழைய வீட்டை விட்டு வெளியேற்றுவதாக இருந்தால் அவர்களுக்கு வேறு இடம் கொடுக்க வேண்டும். அந்த இடத்தில் வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். அந்த முறையில் தெருவுகளை நேராக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நடவடிக்கை எடுத்துக் கொள்ள அரசாங்கம் முடிவு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

II.—ANNOUNCEMENTS—*cont.*

(2) BUSINESS OF THE HOUSE.

MR. SPEAKER : I want to inform the House the following programme of business as decided by the Business Advisory Committee :—

20th February 1961	Monday	Holiday.
21st February 1961	Tuesday	No meeting.
22nd February 1961	Wednesday	Official business—Government Bills.
23rd February 1961	Thursday	
24th February 1961	Friday	Non-Official business.
25th February 1961	Saturday	Presentation of the Budget.
27th February 1961	Monday .. .	General discussion on the Budget.
28th February 1961	Tuesday	Census Holidays.
1st March 1961	Wednesday	
2nd March 1961	Thursday	General discussion on the Budget.
3rd March 1961	Friday	
4th March 1961	Saturday	
6th March 1961	Monday	

NOTE,—The House will sit from 8-30 a.m. to 1-30 p.m. daily. Further programme will be announced later.

I shall have this programme cyclostyled and circulated to Members.

(3) ARRANGEMENTS AT THE RAJAJI HALL DURING THE QUEEN'S VISIT.

MR. SPEAKER : Hon. Members are aware that Her Majesty Queen Elizabeth II and His Royal Highness the Duke of Edinburgh are coming to the Rajaji Hall at 6 p.m. to-morrow. Invitations have already been issued to hon. Members for the Rajaji Hall function. They have also been given car passes. First the invitation was confined to Members only, but subsequently on representation, the Government decided that each hon. Member be given not more than five passes for their family. The families of Members will be seated in the lawn in front of the Rajaji Hall and *only* Members of the Legislative Assembly and Members of the Legislative Council and no others will be allowed to go up the steps of the Rajaji Hall. The Members will be seated on the verandah of the Rajaji Hall and they will be having refreshments. The Duke and Her Majesty will go round and meet them and then they will go into the Hall.

Hon. Members are requested to be in their seats before 5-30 p.m.

Some Members have already been given passes. Those who have not yet received passes and all Members who require further passes for families can apply for them. These will be given by the Legislative Assembly Department, taking into consideration the number of passes already given.

Members who are not residing inside the Government Estate will enter by the main gate opposite to Simpson and Company. They will have to show the passes for themselves and their families at the gate. If they do not show the passes, it is likely they may not be allowed inside. Members will remain in their seats and leave after five minutes after the departure of Her Majesty and His Royal Highness Prince Philip.